செ.வெ.எண்: 29 நாள்:12.12.2018

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் மாண்புமிகு பாரத பிரதமரின் “அனைவருக்கும் வீடு” திட்டத்தின் கீழ் கரூர் நகராட்சியில் உள்ள ஆட்சேபகரமான அரசு நிலங்களில் ஆக்கிரமித்து வரும் குடிசை வாசிகளுக்கு மறுகுடியமர்வு செய்வதற்கும், நகர்ப்புறங்களில் உள்ள வீடற்ற ஏழைகளுக்கு குடியமர்வு செய்யவும் கரூர் நகராட்சி சணப்பிரட்டி மற்றும் தோரணக்கல்பட்டி பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப்பகுதிகளில் குடியிருப்பு ஒதுக்கீடு பெற கீழ்க்கண்ட தகுதிகள் உள்ள பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. **1)** பயனாளிகள் கரூர் நகராட்சி எல்லைக்குள் வசிப்பராக இருக்க வேண்டும். **2)** இந்தியாவில் வேறு எங்களும் பயனாளியின் பெயரிலோ அல்லது அவரது குடும்பத்தாரின் பெயரிலோ வீடோ அல்லது வீட்டு மனையோ இருத்தல் கூடாது. **3)** பயனாளி மற்றும் குடும்பத்தாரின் ஆண்டு வருமானம் ரூ.**3.00** இலட்சத்திற்கு குறைவாக இருக்க வேண்டும். **4)** பயனாளிகள் ஒவ்வொருவரும் ஒரு குடியிருப்பிற்கு தோராயமாக ரூ.**1.88** இலட்சம் பயனாளி பங்களிப்பு தொகையாக செலுத்த வேண்டும். விண்ணபங்களுடன் இணைக்கப்பட வேண்டிய நகல்கள்: வருவாய் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட இருப்பிட சான்றிதழ், வருமான சான்றிதழ், மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தில் உள்ள எவருக்கும் இந்திய நாட்டில் எங்கும் மனையோ வீடோ இல்லை என்று சான்றிதழ். மனுதாரர் குடிசைப்பகுதியில் ஆக்கிரமிப்பில் வாடகை வீட்டில் வசித்து வருகிறார் என்பதற்கான சான்றிதழ். மேற்கண்ட தகுதியுள்ள பயனாளிகள் உதவி நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் நெ.**1** K.M.C காலனி, பாலாம்பாள்புரம், கரூர் – **639 001** அணுகி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பங்களை சமர்பிக்கலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**விண்ணப்பம் அளிப்பதற்கான கடைசி நாள் – 31.12.2018**

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.